දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපෑල )postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி
e-mail )

වෙබ්අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம்

මගේ අංකය )
எனது இல )
My No. ) CF/EXC/04/2021

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி ) 2022/02/ 23
Date )

සුවසිරිපාය
சுவசிரிபாய
**SUWASIRIPAYA**

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
**Ministry of Health**

பொதுச் சுற்று நிருப இல: 02/18/2022

மாகாண சுகாதார செயலாளர்கள்,
பிரதிப் பணிப்பாளர் நாயகம் - இலங்கை தேசிய வைத்தியசாலை,
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
மத்திய அமைச்சின் கீழ் உள்ள அனைத்து வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,
பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
உரிய நிறுவனத் தலைவர்களும்

**சுகாதார அமைச்சின் (MT – 06 - 2016) சம்பள அளவுக்குரித்தான துணைமருத்துவ சேவைக்குரிய ஆய்வுகூட தொழிநுட்பவியலாளர் தரம் I ற்குரிய உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை 2022 -(முதலாவது தடவை)**

ஆய்வுகூட தொழிநுட்பவியலாளர் தரம் I உத்தியோகத்தர்கள் தரம் Iற்கு பதவி உயர்வு பெற்று 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் பூர்த்திசெய்யவேண்டிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை 2018/06/24 ஆம் திகதி ஆங்கில மொழியின் மூலம் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறியத்தரப்படுகிறது. பரீட்சை நடைபெறும் இடம், நேரம் என்பன பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிட்டு அனுப்பிவைக்கப்படும்.

02 **தகைமைகள்**

ஆய்வுகூட தொழிநுட்பவியலாளர் தரம் I ற்கு நியமிக்கப்பட்டு மற்றும் கீழுள்ள 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வினைத்திறமைக்காண் தடைப்பரீட்சையிலிருந்து விடுதலை செய்யப்படாத உத்தியோகத்தர்கள் இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்க முடியும்.

**கவனிக்கவும் : 2021/12/31 திகதிக்கு தரம் Iற்கு நியமிக்கப்பட்டு உரிய நியமனக் கடிதம் கிடைக்கப்பெற்ற உத்தியோகத்தர்கள் விண்ணப்பங்கள் மாத்திரம் பணிப்பாளர் (பரீட்சை)க்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கவும்.**

03 **வினைத்திறமைக்காண் தடைப்பரீட்சையிலிருந்து விடுதலைப்பெறல்**

அரச நிர்வாக சுற்றுநிரூபம் 6/2006ற்கமைய 2016.01.01ஆம் திகதி அரச சேவை ஆணைகுழுவினால் அனுமதி வழங்கப்பட்ட புதிய ஆட்சேர்ப்புதிட்டத்திற்கமைய தரம் I இற்கு நியமிக்கப்பட்டு (05) வருட திருப்திகரமான சேவைக்காலத்தை பூரணப்படுத்திய உத்தியோகத்தர்கள் மூன்றாம் வினைத்திறமைக்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைவதிலிருந்து விடுதலைசெய்யப்பட்டுள்ளனர்.

## 04 விண்ணப்பங்கள்

இச் சுற்று நிருபத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக விண்ணப்பதாரிகளினால் தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் தங்களினுடைய திணைக்களத் தலைவரின் ஊடாக பணிப்பாளர் (பரீட்சைகள்), சுகாதார அமைச்சு, "சுவசிரிபாய", இலக்கம் - 385, வண.பத்தேகம விமலவங்சதேரர் மாவத்தை, கொழும்பு- 10 என்னும் முகவரிக்கு **2022/03/31** ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் சரியானவை என பிரிவுத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு இருக்கவேண்டும். தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முகவரியிடப்பட்ட ரூபா.45 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட (9" X 4") அளவுடைய கடித உறை மூன்றினையும் (03) (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ, அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் சரியாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள், உரியமாதிரிப் படிவத்திற்குக அமையாத விண்ணப்பங்களும் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிப்படும்.

குறிப்பு : விண்ணப்பமானது A4 தாளின் இருபக்கங்களினையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும். முதலாவது பக்கத்தில் 01 – 03 வரையான விபரங்களும், இரண்டாவது பக்கத்தில் 04 – 10 வரையான விபரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்க கூடியவாறும் இருத்தல் வேண்டும். மேற்படி மாதிரிக்கு ஒவ்வாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

## 05 பரீட்சைக் கட்டணம்

4.1 முதன் முறையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக் கட்டணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு விடயத்திற்கும் ரூபா.25 வீதம் இரத்துச் செய்யப்படாத முத்திரையினை ஒட்டி அதன் மீது தமது கையொப்பத்தினை இட்டு இரத்துச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

4.2 எக் காரணத்தினைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது வேறு பரீட்சைகளின் பொருட்டு மாற்றப்படவோ, அல்லது மீளப் பெறப்படவோ இடமளிக்கப்பட மாட்டாது.

## 06 பரீட்சைக்கான அனுமதி

5.1 ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். அப் பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப் படவில்லையாயின் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப் படமாட்டாது.

5.2 பரீட்சையின் பொருட்டு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தங்களினது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுவதன் பொருட்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை கொண்டு வருதல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை

(ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழுங்கப்பட்ட அடையாள அட்டை

(இ) வலுவுள்ள சாரதி அனுமதிப்பத்திரம்

(ஈ) வலுவுள்ள கடவுச் சீட்டு

07 பரீட்சைதிட்டம்

இப்பரீட்சையானது தமது பதவிக்குரித்தான விடய அறிவு தொடர்பான கட்டமைப்பு கட்டுரை வடிவிலான வினாத்தாளினை உடையது. அவ்வினாத்தாள் (08) வினாக்களைக் கொண்டமைந்துள்ளதுடன் அதில் விரும்பிய (05) வினாக்களுக்கு விடையளிக்க முடியும். நேரம் 03 மணித்தியாலங்கள். மொத்தப்புள்ளி 100. சித்தியடைவதன் பொருட்டு குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

08 பரீட்சைப் பாடத் திட்டங்கள்

பாடவிதானம்

01. ஆய்வுகூட தொழிநுட்ப கோட்பாடுகளும், நடைமுறைகளும்
    - அ) நுண்ணங்கியியல்
    - ஆ) இரசாயனவேதியல்
    - இ) குருதியியல்
    - ஈ) சிகிச்சைநிலைய வியாதியியல்
    - உ) திசுவியல்
02. ஆய்வுகூட முகாமைத்துவம்.
03. உபகரண பராமரிப்பு மற்றும் திருத்தம் செய்யும் முறை
04. ஆய்வுகூட பாதுகாப்பு முறை
05. திணைக்கள ஒழுங்கு விதிகள்
    - அ) உபகரணங்கள், இரசாயணப் பதார்த்தங்கள் போன்றவற்றிற்கு விண்ணப்பித்தல்
    - ஆ) பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற பொருட்களை அகற்றும் செயற்பாடு
    - இ) இரசாயனப் பொருட்கள் பெற்றுக்கொள்ளல், களஞ்சியப்படுத்தல், வழங்குதல், கணக்குவைத்தல்.

09 பரீட்சை தொடர்பான ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல்.

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவி செய்தலை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

10 தயவு செய்து இச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களினை தங்களின் நிறுவனத்தில் கடமையாற்றும் சகல உத்தியோகத்தர்களிற்கும் தெரியப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இந்த தகவல்களை **www.health.gov.lk** எனும் இணையத் தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

கவனிக்கவும் :- சிங்களம், தமிழ், ஆங்கில மொழியிலான சுற்றுநிருபங்களுக்கிடையே ஏதாவது ஒவ்வாமைகள் காணப்படுமாயின் சிங்கள மொழியிலான சுற்றுநிருபமே வலுவுடையதாகும்.

**Chamika H. Gamage**
Deputy Director General (Administration) II
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10.

சாமிக எச் கமகே
பிரதிப் பணிப்பாளர் நாயகம் ( நிர்வாகம் ) 02
செயலாளருக்காக,
சுகாதார அமைச்சு

EXC

மாதிரி விண்ணப்பப் படிவம்

| அலுவலக உபயோகத்தின் பொருட்டு |
|---|
| |

**சுகாதார அமைச்சின் (MT – 06 - 2016) சம்பள அளவுக்குரித்தான துணைமருத்துவ சேவைக்குரிய ஆய்வுகூட தொழிநுட்பவியலாளர் தரம் I ற்குரிய உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை 2022 (முதலாவது தடவை)**

01. (அ) (i) விண்ணப்பதாரியின் பெயர் (முதல் எழுத்துக்களை பின்னால் இட்டு சிங்களத்தில் / தமிழில் எழுதவும்) : ……………………………………………………………………………………

(ii) விண்ணப்பதாரியின் பெயர் (முதல் எழுத்துக்களை பின்னால் இட்டு ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில் எழுதவும்) :

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதல் எழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் : (சிங்களத்தில்) / தமிழில்:
……………………………………………………………………………………………………

(iv) முதல் எழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் : (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) தரம் Iற்கு பதவியுயர்வு செய்யப்பட்ட திகதியும் கடித இலக்கமும் : ……………………………
……………………………………………………………………………………………………

(ii) தற்போது பெறும் வருடாந்த சம்பளம் : ……………………………………………………

(iii) கையடக்கத் தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

(iv) தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

(v) மின்னஞ்சல் முகவரி :……………………………………………………………………

02. (அ) தற்போது சேவை புரியும் நிறுவனம்:

(சிங்களத்தில்)……………………………………………………………………………………

(தமிழில்) ……………………………………………………………………………………

(ஆ) இந்த நிறுவனம் நிர்வகிக்கப்படுவது - மத்திய அரசினால் ☐
- மாகாணசபையினால் ☐

(இ) அதற்குரிய மாவட்டம் : ……………………………………………………………………

(ஈ) பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதன் பொருட்டு தெளிவாக விண்ணப்பதாரியினது முகவரியிடப்பட்ட 9" X 4" அளவு ரூபா.45.00 பெறுமதியுடைய முத்திரை இடப்பட்ட கடித உறை 03 இணைக்கப்பட்டு உள்ளதா? ……………………………………………………………

03. பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்): ……………………………………

04. (அ) இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா? ..........................................................................
(ஆ) அவ்வாறு தோற்றியிருந்தால் இந்த தடவை முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா?

| முத்திரைக் கூண்டு |
| --- |

05. **விண்ணப்பதாரியின் உறுதியுரை**

(i) இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் இப் பரீட்சைக்கு நான் முதற்தடவையாக தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்றும் / முதற் தடவை அல்லாத படியால் ரூபா................. பெறுமதியுடைய முத்திரை ஒட்டியுள்ளதாகவும் இம் முத்திரையானது விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி இரத்துச் செய்வதற்கு முன்னர் பாவிக்கப்படாத பெறுமதியுடைய முத்திரையெனவும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

(ii) சுகாதார திணைக்களத்தினால் பரீட்சைகள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கு அமைய செயற்படுவேன் என்றும், இப் பரீட்சை தொடர்பான பிரமாணங்களுக்கு அமைய நான் தகைமையற்றவனாக காணப்பட்டால் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்தவற்கும் இது தொடர்பாக எடுக்கப்படும் எந்த தீர்மானத்திற்கும் இணங்குவேன் என்றும் இத்தால் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திகதி : .............................

..............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

06. **தனிநபர் கோவையினை கையாளும் உத்தியோகத்தரின் உறுதியுரை**

இந்த விணணப்பம் விண்ணப்பம் பாரமேற்கப்படும் தினத்திற்கு முன்னர் என்னிடம் கிடைக்கப்பெற்தென்றும், தனிநபர் கோவையில் உள்ள தகவல்களுக்கு அமைய விண்ணப்பதாரி இந்த விண்ணப்பத்தை சரியாக பூரணப்படுத்தியுள்ளதாகவும், இந்த விண்ணப்பத்தில் பிரதி தனிநபர் கோவையில் கோவையிடப்பட்டுள்ளதென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி :

.............................................................
பெயர், கையொப்பம்

07. **நிறுவனத் தலைவரின் கையொப்பம்**

திரு/திருமதி/செல்வி/செல்வன் ............................................... என்பவரினை நான் நன்கு அறிவேன் என்றும் இவர் இப் பரீட்சைக்குத் தோற்றுவது முதற் தடவை ஆனபடியால் முத்திரை ஒட்ட தேவையில்லை என்றும் / முதற்தடவை அல்லாத படியால் ரூபா........... முத்திரை ஒட்டப்பட்டுள்ளது என்றும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் இவருடைய சுயவிபரக் கோவைக்கு அமைவாக சரியானவை என்றும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிய தகைமைகளினை இவர் பூத்தி செய்துள்ளார் என்றும் என் முன்னிலையில் தனது கையொப்பத்தினை இட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ..............................

.....................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரை இடப்பட வேண்டும்)

08. **பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு / விசேட பிரிவின் தலைவரின் உறுதிப்படுத்தல்**

திரு/திருமதி/செல்வி/செல்வன் ............................................ என்பவர் எனது நிறுவனத்தில் ....................................... உத்தியோகத்தராக பணியாற்றுகின்றார் என்றும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சுயவிபரக் கோவைக்கு அமைய சரியானவையென்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிய தகைமைகளினை இவர் பூர்த்தி செய்துள்ளார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ...............................

...........................................................................
பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு / விசேட பிரிவு தலைவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரை இடப்பட வேண்டும்)